


# இலங்கையில் செஞ்சிலுவை சர்வதேச குழு

சுருக்கக் கையேடு

ICRC




# எமது செயற்பாடு

செஞ்சிலுவை சர்வதேச குழுவானது (ஐசிஆர்சி) இலங்கையில் 1989ஆம் ஆண்டு தொடக்கம் பிரசன்னமாக இருக்கிறது. இவ்வமைப்பு ஜனதா விமுக்தி பெரமுனவின் கிளர்ச்சி முதற்கொண்டு பிற்காலத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆயுத மோதல்கள்வரை ஏற்பட்ட மனிதாபிமான தேவைகளில் உதவியிருந்தது. இன்று, கடந்த கால மோதல்களின் எஞ்சிய மனிதநேயத் தேவை-களை நிறைவேற்றுவதில் ஐசிஆர்சி கவனம் செலுத்துகிறது.

இலங்கையில் ஐசிஆர்சி:

1. காணாமற்போன ஆட்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் உளவியல்-சமூக, பொருளாதார, சட்ட மற்றும் நிர்வாகத் தேவைகளை நிறைவேற்ற உதவும் நாடளாவிய திட்டத்தை அமுலாக்குகிறது. அத்துடன், தமது அன்புக்குரியவர்கள் எங்கிருக்கிறார்கள், அவர்களுக்கு நடந்தது என்ன என்ற கேள்விகளுக்கு பதில் அளிக்கும் முறையொன்றிற்காக பரிந்துரைக்கிது.

2. மருத்துவ-சட்டவியல் துறையினரின் ஆற்றலை அதிகரித்துக் கொள்ள தொழில்நுட்ப உதவி வழங்குவதுடன், தடயவியல் தொடர்பான கொள்கை விவ-காரங்களுக்கான கருத்தாடலுக்கு பங்களி-ப்பு நல்கி, அதன்மூலம், ஆயுத முரண்பாடு, இயற்கை அல்லது தொழில்நுட்ப பேரிடர்கள் அல்லது புலம்பெயர்வின்போது உயிரிழந்-தவர்களின் உடலங்களை தொழில்முறை-றயாகவும், கௌரவமாகவும் முகாமைசெய்ய வசதியளிக்கிறது.

3. ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்க-ளின் வாழ்க்கை நிலைமையையும், சுகா-தாரப் பராமரிப்பு மற்றும் உரிய முறைமை ஒன்றிற்கு அவர்களுக்குள்ள உரிமை-களையும் அவர்கள் நடத்தப்படும் விதத்தை-தயும் விருத்தி செய்ய அதிகாரிகளுக்கு உதவுவதற்காக அத்தகைய இடங்களுக்கு விஜயம் செய்கிறது.

4. ஆயுதப் படைகள், தேசிய அதிகார அமைப்புக்கள், சிவில் சமூகம், கல்வியாளர் மற்றும் சமய வட்டங்கள் மத்தியில் சர்வதேச மனிதாபிமான சட்டம் பற்றிய அறிவை மேம்படுத்தி வலுப்படுத்துவதுடன், தேடுதல், கைது செய்தல், தடுத்து வைத்தல் நடைமுறைகள் மீதான பிரயோகிக்கப்படக்கூடிய சர்வதேச சட்ட நியமங்கள் பற்றி பொலிஸாருக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சிகளையும் நடத்துகிறது.

5. மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உதவி செய்து, சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கத்தின் வேலைகளில் முக்கியமாத் திகழும் உலகளாவிய மனிதாபிமான கோட்பாடுகளை ஊக்குவிக்கிறது.




# காணாமல் போன ஆட்களது குடும்பத்தின் தேவைகளுக்கு பதிலளித்தல்

ஆயுத மோதல்களிலும், வன்முறை, பேரிடர்கள், புலம்பெயர்வு ஆகிய ஏனைய நிலைமைகளிலும் காணாமல் போன தமது அன்புக்குரியவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க அவர்களது குடும்பங்களுக்கு ஐசிஆர்சி உதவுகிறது. இலங்கையில் 1983ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை நீடித்த ஆயுத நெருக்கடியின்போது உறவுகள் காணாமல் போன குடும்பங்களில் இருந்து அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க உதவுமாறு சுமார் 35,000 கோரிக்கைகளை ஐசிஆர்சி பெற்றது. சமகாலத்தில், இத்தகைய 15,000 கோரிக்கைகள் தொடர்பான கோரிக்கைகள் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றில் சில கோரிக்கைகள் 1990ஆம் ஆண்டுக்கு முன்னரான காலத்துக்குரியவையாகும்.

2014ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை, இலங்கை முழுவதும் உள்ளடங்கும் வகையில் ஆட்கள் காணாமல் போன குடும்பங்களின் தேவை மதிப்பீடொன்றை ஐசிஆர்சி மேற்கொண்டது. தமது உறவுகளுக்கு நடந்ததை அறிந்து கொள்வதில் அந்தக் குடும்பங்களுக்கு உள்ள உரிமைகள் அடங்கலாக, அத்தகைய தேவைகளை எவ்வாறு நிறைவேற்றலாம் என்ற பரிந்துரைகளுடன் மதிப்பீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இந்த நோக்கத்திற்காக, சட்ட மற்றும் தடயவியல் நிபுணத்துவத்தின் ஊடாக காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்திற்கு தொழில்நுட்ப உதவிகளையும், தரவு பாதுகாப்பு மற்றும் தரவு முகாமைத்துவம் தொடர்பான ஆலோசனைகளையும் ஐசிஆர்சி வழங்கியிருந்தது. இன்னமும் காணாமற்போன நிலையில் இருக்கின்ற ஆட்களுக்காக, இலங்கையின் இறப்புச் சான்றிதழுக்கு மாற்றாக, காணமல்போனமைக்கான சான்றிதழினை அறிமுகப்படுத்தவும் அதிகாரிகளுடன் இணைந்து ஐசிஆர்சி செயற்பட்டது.

ஆட்கள் காணாமல் போன குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காக ஐசிஆர்சி உள்ளூர் ஸ்தாபனங்களுடன் இணைந்து முழுமையானதொரு உதவித் திட்டத்தை ஆரம்பித்தது. இந்தத் திட்டமானது, ஆட்கள் காணாமல் போன குடும்பங்களுக்கு அவர்கள் விடைகளுக்காக காத்திருக்கும் வேளையில் பரிந்துரைத்தல் முறைமையின் ஊடாக, வாழ்வாதார உதவிகளையும், உணர்வுபூர்வமான ஒத்தாசைகளையும், சட்ட மற்றும் நிர்வாக ஒத்துழைப்பையும் பெற்றுக் கொடுக்கிறது.

ஆட்கள் காணாமல் போன குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்தைக் கட்டியெழுப்பி, அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து,

உணவு நுகர்வை விருத்தி செய்வதற்கு அவசியப்படும் திடமானதொரு வருவாயைப் பெறுவதற்காக, அந்தக் குடும்பங்கள் பணம், பொருள் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலும் பொருளாதார உதவிகளைப் பெறுகின்றன. இத்தகைய நலிவுற்ற குடும்பங்கள் வணிக முகாமைத்துவ ஆற்றல்களை வளர்த்துக் கொண்டு, சந்தையுடனும் சேவை வழங்குனர்களுடனும் தொடர்புகளை ஸ்தாபித்து, தமது வியாபாரத்தை பெருக்கிக் கொள்ள ஐசிஆர்சியின் பன்முக வாழ்வாதார உதவி நிகழ்ச்சிகள் இடமளிக்கின்றன.

ஆட்கள் காணாமல் போன குடும்பங்கள் நிச்சயமற்ற நிலையில் வாழ்கின்றன. அன்புக்குரியவரின் இழப்பை சூழ்ந்திருக்கும் நிலையானது அவர்கள் தொடர்பான தகவலற்ற நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது. இந்த அனுபவமானது, 'ஐயப்பாடான இழப்பு' என்று அறியப்படுகிறது. இதனை உளவியல் மற்றும் உளவள பாடவிதானங்களில் சேர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன், பல்கலைக்கழகங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐசிஆர்சி பயிலரங்குகள் மற்றும் விரிவுரைகளை ஏற்பாடு செய்கிறது.




# தடயவியல் ஆற்றலை வலுப்படுத்தல்

ஐசிஆர்சியின் தடயவியல் நிகழ்ச்சித் திட்டமானது, ஆயுத நெருக்கடிகள், பேரிடர்கள், புலம்பெயர்வு ஆகியவற்றின்போது உயிரிழந்தவர்களின் உடலங்கள் கௌரவமாகவும், தொழில்முறையாகவும் முகாமைப்படுத்தப்படுவதை உறுதிசெய்கிறது. இலங்கையில், மனித உடல்களை மீட்டு, பரிசோதித்து, இனங்காணும் ஆற்றல்களை மேம்படுத்தவும், தடயவியல் தொல்பொருளியல் மற்றும் மானுடவியலை பிரயோகிப்பதிலும் மருத்துவ-சட்டத்துறை சமூகத்திற்கு ஐசிஆர்சி உதவி செய்கிறது. இதில் தடயவியல் சார் தகவல்களை ஒரு முறையான சட்டகத்திற்குள் திரட்டி, மையப்படுத்தி, நிர்வகிப்பதற்குரிய தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வலுப்படுத்தலும் அடங்கும்.

தேசிய பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுகையில், தொழில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் சவச்சாலை கட்டமைப்புகளுக்குள் தொற்று ஏற்படுதலை கட்டுப்படுத்தல் தொடர்பில் சிறிய அளவில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் ஐசிஆர்சி உதவுகிறது. கொவிட்-19 பெருந்தொற்று சமயத்தில், தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களையும், பிரேத உறைகளையும் வழங்கி, சவச்சாலைகளுக்கும் சுகாதார அமைச்சிற்கும் ஐசிஆர்சி உதவி செய்தது. ஆசிய பசுபிக் பிராந்தியம் முழுவதிலும் அறிவை மேம்படுத்தி, சிறப்பான நடைமுறைகள் பரிமாறிக் கொள்ளப்படுவதற்கும் தொழில்முறைசார் வலைப்பின்னல்களுக்கு வழிவகுக்கும் நோக்கத்துடன், மனிதாபிமான தடயவியல் தொடர்பான தேசிய மட்ட பயிலரங்குகளையும், சர்வதேச கருத்தரங்குகளையும் ஐசிஆர்சி ஏற்பாடு செய்கிறது.




# தடுத்துவைக்கப்படுவோர் நடத்தப்படும் விதத்தையும், நிலைமைகளையும் மேம்படுத்துவதற்கு உதவுதல்

இலங்கையில், ஐசிஆர்சியானது 1989ஆம் ஆண்டு தொடக்கம் ஆயுத நெருக்கடியுடனும், ஏனைய நிலவரங்களுடனும் தொடர்புடையதாக கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆட்களை சந்தித்துள்ளது. இன்று சிறைச்சாலைகள், புலம்பெயர்வு தடுப்பு நிலையங்கள், பொலிஸ் நிலையங்கள் ஆகியவை அடங்கலாக தடுப்புநிலையங்களுக்கு ஐசிஆர்சி விஜயம் செய்து, கைதிகள் நடத்தப்படும் விதத்தையும், அவர்களின் வாழ்க்கை நிலைமைகளையும் விருத்தி செய்து, அவர்களுக்கான நீதிக்கான உத்தரவாதங்கள் மதிக்கப்படுவதை உறுதி செய்யவும் உதவுகிறது.

இந்த விஜயங்களின்போது கண்டறியப்பட்ட விடயங்களும், பரிந்துரைகளும் தடுத்து வைத்திருக்கும் அதிகாரிகளுடன் நம்பகமான முறையில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. இதன் நோக்கம், சிறைச்சாலைகளில் அளவுக்கு அதிகமானவர்கள் தடுத்து வைக்கப்படுதலுக்கான சட்ட ரீதியான பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு, கைதிகள் மனிதாபிமானமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்தும் முயற்சிகளில் அதிகாரிகளுக்கு உதவுவதாகும். செஞ்சிலுவைத் தகவல் பரிமாற்றத்தின் ஊடாகவும், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது அன்புக்குரியவர்களை பார்வையிட செல்லும் குடும்பத்தவர்களுக்கு பயண ஊக்குவிப்புத் தொகையை வழங்குவதன் மூலமும், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தமது குடும்பத்தவர்களுடன் தொடர்பில் இருக்க ஐசிஆர்சி உதவுகிறது.

சிறைச்சாலைகளில் சிறிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் மூலமாக சிறைச்சாலையின் சுகாதார பராமரிப்பு சேவைகளை விருத்தி செய்வதற்காக அதிகாரிகளுடன் இணைந்து ஐசிஆர்சி வேலை செய்கிறது. கொவிட்-19 பெருந்தொற்று சமயத்தில், தொழில்நுட்ப பரிந்துரைகளையும் பொருள் உதவிகளையும் வழங்குவதன் மூலம், தடுப்பு நிலையங்களில் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த அதிகாரிகளுக்கு ஐசிஆர்சி உதவியது. சிறைச்சாலைகளில் உள்ளவர்கள் தமது உறவுகளுடன் தொடர்பு கொள்ள உதவும் வகையில் சிறைச்சாலைகள் திணைக்களம் ஆரம்பித்த வீடியோ கலந்துரையாடல் வசதிக்கும் ஐசிஆர்சி உதவியது.

அதிகாரிகளின் தொழில்நுட்ப ஆற்றலைக் கட்டியெழுப்பி, சிறப்பான நடைமுறைகளை பரிமாறிக் கொள்ள வழிவகுக்கும் நோக்கத்துடன், தடுத்து வைத்தல் நியமங்கள் தொடர்பான உள்ளூர் பயிலரங்குகளையும், சர்வதேச கருத்தரங்குகளையும் ஐசிஆர்சி ஏற்பாடு செய்கிறது.




# சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் மீதான நன்மதிப்பை மேம்படுத்தல்

ஆயுத நெருக்கடிகளிலும், ஏனைய வன்முறை நிலைமைகளிலும் நிகழக்கூடிய மனித அவலங்களையும், தீங்குகளையும் குறைக்கும் எமது உலகளாவிய நன்முயற்சியின் ஒரு பாகமாக, நாம் பாதுகாப்பு மற்றும் ஆயுதப் படைகள், தேசிய அதிகார அமைப்புக்கள், சிவில் சமூகம், கல்விச் சமூகம் ஆகியவற்றின் மத்தியில் சர்வதேச மனிதாபிமான சட்டம் (ச.ம.ச) பற்றியும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் (ச.ம.உ.ச) பொருத்தப்பாடுகள் பற்றியும் அறிவை வலுப்படுத்தி மேம்படுத்துகிறோம். இவ்வமைப்புகள் தத்தமது பயிற்சிகளிலும், பாடவிதானங்களிலும் இக்கோட்பாடுகளை இணைத்துக் கொள்வதற்கு நாம் உதவுவதுடன், அவற்றின் அங்கத்தவர்கள் வெளிநாடுகளில் நடைபெறும் இது தொடர்பான கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகளில் பங்கேற்று விடயம் சார்ந்த புரிந்துணர்வை மேம்படுத்த அனுசரணை அளிக்கிறோம். தத்தமது மதங்கள் சர்வதேச மனிதாபிமான சட்ட கோட்பாடுகளுடன் தொடர்புபடுவதை ஆராய்வதற்காக வெவ்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்ட கல்விமான்களுடனும் நாம் வேலை செய்கிறோம்.

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் செயற்பாடுகளில் பங்களிப்பு வழங்கும் நாடென்ற ரீதியில் இலங்கையின் வகிபாகத்தைக் கருத்திற்கொண்டு, வெளிநாட்டு அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்படும் பாதுகாப்புப் படைகளின் அங்கத்தவர்களுக்கு ச.ம.ச மற்றும் ச.ம.உ.ச பற்றி விளக்கம் அளித்து வருகிறோம். ச.ம.ச பற்றியும், கடல் சார் ஆயுத நெருக்கடி சட்டங்கள் பற்றியும் அறிவதை ஊக்கப்படுத்துவதற்காக நாம் இலங்கை கடற்படையுடன் தொடர்ந்து வேலை செய்வதுடன், கடல் சார் மனிதாபிமான விவகாரங்களைக் கையாளும் ஆற்றல்களையும் கட்டியெழுப்புகிறோம். ச.ம.உ.ச பற்றியும், படைப்பலம் மற்றும் துப்பாக்கிகளை சரியாக பயன்படுத்துதல் பற்றியும், தேடுதல் -கைப்பற்றுதல் - கைது செய்தல் - தடுத்து வைத்தல் நடைமுறைகளின் சர்வதேச தராதரம் பற்றியும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அடங்கலாக ஸ்ரீலங்கா பொலிஸின் பல்வேறு பிரிவினருக்காக பயிற்சி அமர்வுகளையும் நாம் நடத்தியுள்ளோம்.

ச.ம.ச பற்றிய ஆலோசனைச் சேவைகள் ஊடாக, அதனை தேசிய மட்டத்தில் அமுலாக்குவது பற்றி உள்நாட்டு அதிகாரிகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதுடன், ச.ம.ச உடன் தொடர்புடைய சர்வதேச சமவாயங்களை ஏற்றுக்கொள்ளலுக்கும் பதிந்துரைக்கிறோம். ச.ம.ச ஐ நடைமுறை ரீதியில் பிரயோகிப்பது பற்றி புரிந்து கொள்வதற்காக, சர்வதேச குற்றவியல் நீதிமன்ற கட்டமைவில் ச.ம.ச இன் பிரயோகத்தை சோதிக்கும் வகையில், நாம் வருடம்தோறும் சட்ட மாணவர்களுக்கான பயிற்சி வழக்காடுமன்று போட்டிகளை ஏற்பாடு செய்கிறோம்.




# இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் ஒத்துழைத்துப் பணியாற்றல்

ஐசிஆர்சி ஆனது இலங்கை செஞ்சிலுவை சங்கத்துடன் (இ.செ.ச) நெருங்கிப் பணியாற்றுவதுடன், அதன் மனிதாபிமான பணிகளுக்காக நிதி, தொழில்நுட்ப, பொருள் உதவிகளை வழங்குகிறது. இந்த உதவிகளில் கடந்த கால நெருக்கடிகள், இயற்கை அனர்த்தங்கள் அல்லது புலம்பெயர்வால் பிரிந்த குடும்ப உறவுகள் மத்தியில் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்தல், மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவை பற்றிய அறிவை மேம்படுத்தல் போன்றவையும் அடங்கும். ஐசிஆர்சி ஆனது அவசர நிலைமைகளை சமாளிப்பதற்குரிய தயார்நிலை மற்றும் பதிலளிப்பதில் இ.செ. சங்கத்தின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கும், முதலுதவி திட்டத்திற்கு உதவி செய்யவும் அதனுடன் இணைந்து பணியாற்றுகிறது.

மாறுபட்ட சூழமைவுகளில் மனிதாபிமான தேவைகள் எழுகையில் பாதுகாப்பாகவும், செயற்றிறனாகவும் பதிலளிப்பதற்கான ஆற்றல்களை மேம்படுத்தி, தயாராக இருப்பதற்கு தேசிய சங்கங்களுக்கு உதவக்கூடிய ‘பாதுகாப்பான அடைவு’ என்ற சட்டகம் பற்றி இ.செ.சங்கத்திற்கு ஐசிஆர்சி பயிற்சி அளிக்கிறது. கொவிட்-19 பெருந்தொற்று சமயத்தில், பெருந்தொற்றின் தாக்கத்தால் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருந்த மக்களுக்கு அவசர நிவாரண உதவி வழங்குவதற்காக எமது பேராயம் இ.செ.சங்கத்துடன் கைகோர்த்தது. விழிப்புணர்வு திட்டங்களை ஆரம்பிக்கவும், பொது ஸ்தானங்களைத் தொற்றுநீக்கம் செய்து, அதன் மூலம் கொவிட்-19 தொற்றக்கூடிய அபாயத்தைக் குறைப்பதற்காகவும், நாம் இ.செ.சங்கத்திற்கு நிதி, தொழில்நுட்ப, பொருள் உதவிகளை வழங்கினோம்.

உலகெங்கிலும் ஆயுத மோதல்கள் மற்றும் ஏனைய வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐசிஆர்சி உதவுகிறது. பெரும்பாலும் செஞ்சிலுவை மற்றும் செம்பிறை பங்காளிகளுடன் இணைந்து, பாதிக்கப்படும் மக்களின் கௌரவத்தைப் பாதுகாத்து, அவர்களின் துயர் துடைக்க தன்னாலான முயற்சிகளை ஐசிஆர்சி செய்கிறது. இந்த ஸ்தாபனம் மனிதாபிமான சட்டங்களை மேம்படுத்தி வலுப்படுத்துவதன் மூலம் கஸ்டங்களைத் தவிர்க்க முனைவதுடன், அகில ரீதியான மனிதநேய கோட்பாடுகளுக்காகவும் முன்னின்று பாடுபடுகிறது.

facebook.com/icrc
twitter.com/icrc
instagram.com/icrc

**செஞ்சிலுவை சர்வதேச குழு**
29, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு – 05
T + 94 (11) 250 33 46
F + 94 (11) 250 33 48
E-mail: colombo@icrc.org www.icrc.org

**வவனியா அலுவலகம்**
70, வைரவர் கோயில் வீதி,
வைரவ புளியங்குளம், வவுனியா
T +94 (0) 24222 28 55
F +94 (0) 24222 25 37

**மட்டக்களப்பு அலுவலகம்**
மன்ரேஸா வீதி, கொத்துக்குளம், பிள்ளையாரடி
மட்டக்களப்பு
T +94 (0) 65 222 70 70
Cover photo:ICRC
© ICRC, September 2021

ICRC

1662/250 09.2021 2000 Cover Photo: ICRC